# மாந்தை கிழக்கு பிரதேச சபை

## முல்லைத்தீவு மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 26 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மே 11 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 மே 14 இல் சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய மாந்தை கிழக்கு பிரதேச சபையானது 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் தலைவருக்கு வழங்கப்பட்ட என்னுடைய அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கங்களைத் தவிர, பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொளகைகளுக்கு அமைய மாந்தை கிழக்கு பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பதிலுள்ள குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக் கூற்றுக்களில் பாதிடப்பட்டவற்றிற்கும் உள்ளபடியானவற்றிற்கும் இடையிலான வித்தியாசத்திற்கான விளக்கங்கள் இணைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 10 நாளேட்டு பதிவுகள் தொடர்பிலான கொடுக்கல் வாங்கல்களின் விபரங்கள் வழங்கப்பட்டிருகாததுடன் தலைவர் மற்றும் செயலாளராலும் கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் வருமானம் மற்றும் சொத்துக்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம் | வருமானம் | | சொத்துக்கள் | |
|---|---|---|---|---|
| | சந்தர்ப் பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப் பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | - | - | 01 | 32,940,349 |
| அதிகரித்துக் கூறல்கள் | 01 | 372,585 | - | - |

### 1.3.3. கணககாய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 4,617,565 மொத்தமான கொடுக்கல் வாங்கல்கள் வேண்டப்பட்ட தகவல்களை கணக்காய்விற்கு வேண்டப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்காமையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், முன்னைய ஆண்டிற்கான ரூபா 720,983 தொகையான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமான மிகையை ஒப்பிடும் போது 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமான மிகை ரூபா 548,103 ஆகும்.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

ரூபா 17,646,438 தொகையான அபிவிருத்தி ஒதுக்கம் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளபடியான வருமானம் மீதான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | இறைகளும் வரிகளும் | - | - | 22.5 |
| (ii) | குத்தகை வாடகைகள் | 80 | 230.3 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 325 | 46.33 | - |
| (iv) | வேறு வருமானங்கள் | 5,082 | 4,561.057 | - |

### 2.3.2. நீதி மன்ற தண்டப்பணங்கள்

மாகாண சபை பிரதம செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பணங்கள் ரூபா 797,503 ஆகும்.

## 2.4 போதிய அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பதிவழிப்பதற்காக அங்கீகாரம் பெறாமல் ரூபா 1,279,263 பெறுமதியான சொத்துக்கள் பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 2.5 செயற்பாட்டு/ முகாமைத்துவ தீறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 9,182 தொகையான முற்பண கொடுப்பனவுகள் மீளாய்வாண்டு இறுதிவரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்காததுடன் இந்த நிலைமை முன்னைய ஆண்டிற்காகவும் எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது.

(ஆ) 2010 ஆம் ஆண்டில் ரூபா 34,260 தொகையான பெறுமதி சேர் வரி சேகரிப்பு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்காததுடன் இது நானாவித வைப்புக்களிற்கு மாற்றப்பட்டிருந்தது.

(இ) காசு மற்றும் களஞ்சியங்களை கையாளும் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைகள் பெறப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வருமான சேகரிப்பு
(ஆ) நிலையான சொத்துக்கள்
(இ) கணக்கீடு
(ஈ) வாகனப் பாவணை
(உ) நானாவித வைப்புக்கள்
(ஊ) பாதீட்டுக் கட்டுப்பாடு